Koviloor Digital Library

|| ஸ்ரீஹரி ||

B 2

கோபத்தை வெல்வது எப்படி?

क्रोध से विजय कैसे हो? (तमिल)



5520
R65

ஸ்வாமி ராம்ஸுகதாஸ்

கோபால் ஸேவா ட்ரஸ்ட், ஈரோடு – 3.

Koviloor Digital Library

First Two Editions 1998-99 20,000 Copies
Third Edition Jan. 2000 5,000 Copies
Fourth Edition June 2000 15,000 Copies

Price:
விலை: } 2.00

கிடைக்குமிடம்:

கோபால் ஸேவா ட்ரஸ்ட்,
81, மோசிகிரனார் வீதி,
பகவத்தாகிநகர்,
ஈரோடு-638 003.

Phone No.: 213976 Fax No.: (0424) 213274

Kovilоor Digital Library

5-6

KOVILOOR
MADALAYAM

கோவிலூர் ஆதீனம்
5520
R65
கோவிலூர்-630 307

உ

Koviloor Digital Library

ஸ்ரீ ராமஜயம்.

சிவமயம்

ஓம் - தத்-சத்

வேதாந்த சிந்தன சாது சமாஜ ஆஸ்ரம ஸ்தாபகர்

பிரம்மஸ்ரீ
பொன். சிதம்பர ஞான தேசிக
சுவாமிகளின்

55-வது ஆண்டு
குருபூஜை விழா

இலவச வெளியீடு.



பிரம்மஸ்ரீ
பொன். சிதம்பர ஞான தேசிக சுவாமிகள்

Koviloor Digital Library

5-6

வேதாந்த சிந்தன சாது சமாஜ ஆஸ்ரம ஸ்தாபகர்
பிரம்மஸ்ரீ பொன். சிதம்பர ஞான தேசிக சுவாமிகளின்
55-வது ஆண்டு விழாவை முன்னிட்டு

"கோபத்தை வெல்வது எப்படி"

என்கின்ற இந்நூல் இலவச வெளியீடாக
வெளியிடப்படுகிறது.

இந்நூலில் வரும் உபதேசங்களை பெரியோர்களும்,
சிறுவர்களும் படித்து பயன்பெற வேண்டுகிறோம்.

பக்தியுடன் பிரம்மஸ்ரீ
பொன். சிதம்பர ஞான தேசிக சுவாமிகளின்
55-வது ஆண்டு குருபூஜை விழா கமிட்டியார்,
வேதாந்தமடம், கொமாரபாளையம்-638183.

விஷு வருடம் சித்திரை மாதம் 4-ஆம் நாள்
17-4-2001 செவ்வாய்க்கிழமை

Koviloor Digital Library



Koviloor Digital Library

(2)

கோபத்தை வெல்வது எப்படி?

நீங்கள் கணிதம் செய்யும்பொழுது அதற்கு உரிய ஸூத்ரத்தை அறிந்து கொண்டுவிட்டால் கணக்கைச் சுலபமாக போட்டுவிட முடிகிறது. இவ்விதமே ஒவ்வொரு பிரச்னைக்கும் ஒரு ஸூத்ரம் இருக்கிறது. அதைக் கற்றுக் கொண்டீர்களானால், கேள்விக்கு விடை தானாகவே வந்துவிடும்.

அது போல ''நாம் கோபத்தை வெற்றி கொள்வது எப்படி?'' என்பது கேள்வி. தொடர்ந்து ''நமக்கு கோபம் எதிலிருந்து பிறக்கிறது?'' என்ற கேள்வியும் எழுகிறது. கீதை— ''காமத்திலிருந்து குரோதம் பிறக்கிறது'' என்று சொல்கிறது— ***''காமாத்க்ரோதோ$_4$ऽபி$_4$ஜாயதே''*** ***(கீ$_3$தா 2/62).*** இந்தக் காமம் (ஆசை) என்பது என்ன? மனிதன் பணம், செல்வம், பெருமை இவைகளில் விருப்பம் ஏற்படுகிறது என்று எண்ணிக் கொண்டிருக்கிறான். இவை எல்லாம் விருப்பம் தான். ஆனால் அடிப்படையில் உள்ள உண்மையான காமம் அல்லது வேட்கை எது?

Koviloor Digital Library

''இப்படி நடக்க வேண்டும், அப்படி நடக்கக் கூடாது'' என்கின்ற அந்தரங்க எண்ணம் இருக்கிறதே அதன் பெயர் தான் காமம், வேட்கை ஆசை அல்லது விருப்பமாகும்.

முதலில் இப்படி நடக்க வேண்டும் என்று ஒரு எண்ணத்தைக் கொள்கிறீர்கள். அது அப்படி நடக்கா விட்டால் கோபம் வந்துவிடுகிறது. அவ்விதமே ஒருவன் நாம் நினைத்தபடி நடக்காவிட்டால் கோபம் வருகிறது. அதே மாதிரி 'இப்படி நடக்கக் கூடாது' என்று நாம் எண்ணியதை ஒருவன் செய்தால், அல்லது நடக்க வேண்டும் என்பதை மற்றொருவர் நடத்தா விட்டாலோ அல்லது அதற்கு மாறாகப் பேசினாலோ, கோபம் வந்து விடுகிறது. இது நடக்க வேண்டும் அல்லது இது நடக்கக் கூடாது என்ற பிடிவாதமே கோபத்திற்கு முக்கியமான காரணமாகும்.

இப்படி நடக்க வேண்டும், அப்படி நடக்கக் கூடாது என்ற ஆசை கொள்வதால் ஒரு பயனும் இல்லை. ஏனென் றால் இந்த உலகம் நாம் சொல்வதைக் கேட்டுக் கொண்டா நடக்கிறது?

Koviloor Digital Library

நம்முடைய விருப்பப்படி அது நடக்குமா? நீங்கள் ''என்னுடைய மனைவி, பையன், வேலைக்காரன் எல்லோரும் நான் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொண்டு அதன்படி நடக்க வேண்டும்'' என்று விரும்புகிறீர்கள். ஆனால் அவர்களுக்கென்று தனி மனம் இல்லையா? தனி எண்ணங்கள் இல்லையா? ஆசைகள், விருப்பங்கள் இல்லையா? அவர்கள் மனதிலும் இப்படிச் செய்ய வேண் டும், அப்படிச் செய்ய வேண்டும் என்கின்ற போக்கு இல்லையா? அவர்கள் மனதிலும் இப்படிப்பட்ட தனிப் போக்குகள் இல்லையென்றால், நீங்கள் சொல்கிறபடி அவர்கள் செய்வார்கள். ஆனால் அவர்கள் மனதிலும் ''இப்படிச் செய்வேன், அப்படிச் செய்ய மாட்டேன்'' என்ற இரண்டு சிந்தனைத் தடங்கள் இருக்கின்றன. பிறகு எப்படி அவர்கள் உங்களுடைய சொல்லை ஏற்றுக் கொள்வார்கள்? அவர்கள் நீ சொல்வதைக் கேட்க வேண்டுமென்றால் நீயும் அவர்கள் சொல்வதைக் கேள். நீ அவர்கள் சொல்வதைக் கேட்கத் தயாராக இல்லாதபோது, உங்கள் பேச்சுப்படி அவர்கள் நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப் பதற்கும் அவர்கள் மேல் அதிகாரம்

Koviloor Digital Library

செலுத்துவதற்கும் உனக்கு என்ன உரிமை? எனவே, ''இவ்விதம் நடக்க வேண்டும், அவ்விதம் நடக்கக் கூடாது'' என்ற எண்ணம் எழும்போது ''மற்றவர்களும் அப்படித்தான் செய்ய வேண்டும்'' என்ற உன்னுடைய பிடிவாதத்தை விட்டுவிடு. இந்தப் பிடிவாதத்தில் ''நான் பெரியவன், இவர்கள் கட்டுப்பட்டவர்கள். நான் சொல்வதைக் கேட்க வேண்டும்'' என்ற செருக்கு இருக் கிறது. ''நான் பெரியவன்'' என்ற கர்வமே தன்முனைப்புக்குத் தலையாய காரணம். அந்த அபிமானம்தான் அவர்கள் அவ்விதம் செய்யாத போது கோபமாக உருவெடுக்கிறது.

நீங்கள் அமைதி பெற விரும்பினால் அபிமானத்தை அழித்து விடுங்கள். ஏனென்றால் அபிமானம் தான் எல்லா அசுர குணங்களுக்கும் வேர் ஆகும். இந்த அபிமானம் என்கிற கொடிய விலங்கின் நிழலில்தான் தீயகுணங்களின் உருவமாகிய கலியுகம் பதுங்கியிருக்கிறது. தீயகுணங்களின் தொகுப்பில் சினம், பேராசை, மோஹம், மதம், பொறாமை, பகட்டு, போலித்தனம் முதலிய கெட்ட குணங்களின் கூறுகள்

Koviloor Digital Library

உள்ளன. இவையனைத்தும் அபிமானத்தையே அண்டி இருக்கின்றன. ஏனென்றால் அபிமானம் தான் இவற்றின் அரசன். நீங்கள் அதை விடாத வரையில் கோபம் எப்படி உங்களை விட்டுப் போகும்? எனவே தான் என்ற செருக்கை விட்டுத் தொலையுங்கள்.

விடுவதற்கு என்ன வழி? உங்கள் சொல்லுக்குக் கீழ்ப்படியாதவர்கள் உங்களுடைய அபிமானத்தை விலக்குவதில் பேருதவி புரிகிறார்கள். உங்கள் சொல்லுக்குக் கீழ்ப்படி பவர்கள் உங்களது செருக்கை வளர்க்கிறார்கள். இந்த உண்மை உங்களுக்குத்தான் நன்மை என்று தோன்றவில்லையா? எனவே உங்கள் சொல்படி நடக்காதவர்கள் உங்களுக்கு எவ்வளவு நன்மையும், உதவியும் செய்கிறார்களோ, அவ்வளவு இதத்தையும், உபகாரத்தையும் நீங்கள் சொல்வதைக் கேட்பவர்கள் செய்வதில்லை. நீங்கள் உங்களுடைய நன்மையை விரும்பினால் உங்கள் அபிமானத்தின் மேல் எவ்வளவு எதிர்ப்பு ஏற்படுகிறதோ, அவ்வளவு நல்லது. அதாவது

Koviloor Digital Library

அவர்கள் நீங்கள் சொல்வதை மதிக்காவிட்டால், அது அவ்வளவு சிறந்தது! சொல்வதைக் கேட்காத போது உங்களுக்கு லாபம் தான்; அதனால் தீங்கில்லை. நீங்கள் சொன்னபடி கேட்பவர்கள் அபிமானம் வளர்வதற்கு வாய்ப்பளிக்கிறார்கள். ஆனால் நீங்கள் சொல்வதைச் செய்யாதவர்கள் உங்களுடைய அபிமானத்தைத் துரத்துவதற்கு உதவுகிறார்கள். ஆகவே சொல்வதைச் செய்யாதவர்களிடம் நீங்கள் செய்நன்றி உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் இதில்தான் நம்முடைய உண்மையான நன்மை இருக்கிறது.

உங்களது கர்வத்தை அழிப்பதன் மூலம் உங்கள் மேன்மைக்கு உதவுகிறோம் என்ற உணர்வு இல்லாமலேயே அவர்கள் உங்கள் சொல்லுக்குக் கீழ்ப்படியாமல் போனாலும் சரி, அதிலும் உங்களுக்கு லாபமே ஏற்படுகிறது. அவர்கள் உங்களுடைய அபிமானம் உறுதிபெறுவதற்கு விடுவதில்லை. அதாவது உங்களுடைய அபிமானம் திடம் ஆவதில்லை. நீங்கள் உங்களுடைய நன்மையை விரும்புகிறீர்களா? அல்லது

Koviloor Digital Library
5520 R65

கெடுதலை விரும்புகிறீர்களா? மேன்மை வேண்டுமா? வீழ்ச்சி வேண்டுமா? நன்மையை வேண்டினால் அது உங்களுடைய அபிமானமின்மையால் கிடைக்கும். நீங்கள் சொல்வதை மற்றவன் ஒப்புக் கொள்ளாத போது தான் நீங்கள் அபிமானம் நீங்கியவராக ஆகிறீர்கள்.. ***நாம் சொல்வது எங்கேயும், எப்போதும் செல்லுபடி ஆகவேண்டும்.*** இது அபிமானம்; கர்வம். இது தான் அசுர குணம். *"த₃ம்பே₄ா த₃ர்போऽபி₄மாநஶ்ச க்ரோத₄:" (கீ₃தா 16/4)* (பகட்டு, கர்வம், அபிமானம், சினம் – அரக்க இயல்புகள்.) எனவே உங்கள் சொல்லைக் கேட்காதவர்கள், உங்களுக்கு மிகப் பெரிய உதவியைச் செய்கிறார்கள். உங்களுடைய தீயகுணங்களை ஒழித்து உங்களிடத்தில் தெய்வ ஸம்பத்தை (நற்குணங்களை) சேர்க்கிறார்கள். (ஸம்பத்து என்றால் குணம் என்ற செல்வம்.)

"சொல்வதைக் கேட்காத பையன் முரடனாக ஆகிவிடு வான். அதற்கு என்ன செய்வது?" என்ற கேள்வி இங்கே எழுகிறது. நீங்கள் சொல்வதைக் கேட்டால் நீங்கள் அதிகார மமதை கொண்டவராக ஆகிவிடுவீர்கள். நீங்கள்

Koviloor Digital Library

சொல்வதைக் கேட்காத அவர்கள் முரடராக ஆகிவிடுவார்கள். இந்த இரண்டு நிலைகளையும் பற்றித் ஆழ்ந்து சிந்தியுங்கள். நீங்கள் இல்லா விட்டாலும் முரடர் ஆகிறவர்கள் அப்படி ஆகத்தான் ஆவார்கள். நீங்கள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவர்கள் முரடர்கள் தான். ஆனால் உங்களுடைய அபிமானம் எவ்வாறு விலகும்? ஆகையால் முதலில் உங்கள் அபிமானத்தை விலக்கவேண்டும். இரண்டாவதாக – நீங்கள் அவர்கள் மேல் அதிகாரம் செலுத்தாமல் இருந்தால், உங்களுடைய இனிமையான அபிமானமற்ற நிலையின் தாக்கம் அவர்களிடத்தில் ஏற்படும். அவர்கள் முரடர்களாகமாட்டார்கள்; சீராகி விடுவார்கள். நீங்கள் கடமைக்காக, ''அப்பா! நீ செய்வது தவறு'' என்று சொல்லிவிடுங்கள். அவர்கள் மேலும் தவற்றையே செய்தால், நீங்கள் அமைதியாக இருந்து விடுங்கள். ஏனெனில் அவர்களது செய்கையின் பயன் அவர்களுக்குத் தானாகவே கிடைத்துவிடும். அது கிடைத்தவுடன் அவர்கள் விழித்துக் கொள்வார்கள்; முரட்டுத்தனம் போகும். நீங்கள் சொல்வதனால் அது

Koviloor Digital Library

போகாது. ஏனெனில் அவர்கள் மனதில் ''தாம் செய்வதே சரி'' என்ற கருத்தே நிரம்பியிருக்கும். உங்களுடைய சொல் வெறும் மேற்பூச்சாகவே இருக்கும். அந்தப் பூச்சு உதிரக் கூடியது. பிறகு அதனால் முரட்டுத்தனம் (மதிக்காத சுபாவம்) எப்படி நீங்கும்? அவனுடைய முரட்டுத்தனம் நீங்குவதற்குச் சரியான வழி நீங்கள் உமது அபிமானத்தை விட்டுவிடுவது தான்.

மனிதன் குடும்பத்தில் இருக்கவேண்டும் என்றால், குடும்பத்தினரோடு நல்லமுறையில் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். அவர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்ளுங்கள் – இதுதான் அந்தக் கலை. உங்கள் கடமையைச் செய்யுங்கள். அவர்களது மகிழ்ச்சியில் மன அமைதி பெறுங்கள்.

குடும்பத்தில் இருப்பது என்றால் என்ன? உங்கள் கடமையைச் செய்கின்ற பொறுப்பு உங்களுக்கு உண்டு. உங்கள் கடமை என்ன? மனைவி இணக்கமாய் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி; பையன் அடங்கியவனாக

Koviloor Digital Library

இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி. அண்ணன் – அண்ணி உங்களுக்கு ஒத்து வந்தாலும் சரி அல்லது வராவிட்டாலும் சரி. தாய்– தந்தையர் அனுகூலமாயிருந்தாலும் சரி; இல்லா விட்டாலும் சரி. சகோதரனின் மகன் ஒத்துவந்தாலும், வராவிட்டாலும் சரி. மற்ற உறவினர் விஷயத்திலும் அப்படியே. நீங்கள் உங்கள் கடமையை ஒழுங்காகச் செய்யுங்கள். அவர்கள் தங்கள் கடமையைச் செய்யட்டும், செய்யாமல் போகட்டும். அந்தப் பக்கம் பார்க்கவே பார்க்காதீர்கள். ஏனென்றால் நீங்கள் 'அவர்கள் முரடர்களாகாமல் இருக்க வேண்டும்' என்று முயல்கிற நேரத்தில் அவர்கள் கடமையை எண்ணுகிறீர்கள். அப்போது நீங்கள் உங்கள் கடமையிலிருந்து விலகிவிடுவீர்கள். உங்கள் பணி அதுவன்று. மற்றவர்களின் குற்றம் குறைகளை ஆராய்ந்து பார்ப்பது உங்கள் கடமை என்று எங்கே சொல்லப் பட்டிருக்கிறது? அறநூல்களில் எந்த இடத்திலும், 'பிறருடைய தீயகுணங்களைக் கண்டு கொண்டே இரு' என்று சொல்லப்பட வேயில்லை. ஆனால் உலகம் என்பது குணம்–குற்றம் இரண்டும் கலந்ததுதான் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

Kavilogam Digital Library

(மாயையின் எல்லாச் செயல்களிலும் குணங்களும், குறைகளும் உள்ளன. இவ்விரண்டையும் காணாதிருப்பது தான் விவேகம்; காண்பது அவிவேகம்.)

பிறரிடம் உள்ள நற்குணத்தைப் பார்ப்பது என்றால் பரவாயில்லை. ஆனால் தீயகுணத்தை மட்டும் பார்க்கவே பார்க்காதே. அவகுணத்தைப் பார்த்தாயானால், அந்த அவகுணமும் உன்னைத் தொற்றிக் கொள்ளும். அவகுணத் தைப் பார்த்து அவர்களை முரட்டுத்தனத்திலிருந்து காப்பாற்ற எண்ணிக் கோபம் கொண்டாயானால் பிறகு நீ கோபத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது. எனவே நீங்கள் உங்கள் கடமையை நிறைவேற்றுங்கள். மற்றவர்களுடைய கடமையைக் கவனிக்க வேண்டாம். பிறரது தீயகுணத்தையும் பார்க்க வேண்டாம். ஆம், பையன் இருக்கிறான். அவனுக்கு நல்ல படிப்புத் தரவேண்டியது தான். நன்னடத்தை கற்பிக்க வேண்டியதும் உன் கடமைதான். அவன் செய்கிறானா என்று பார்ப்பது உன் கடமையில் சேராது. அது அவனது கடமை. அவனுக்குக் கடமையைச் செய் என்று சொல்வது உங்கள் கடமை அல்ல. ''அப்பா இது சரி. அது

Koviloor Digital Library

சரி அல்ல'' என்று எடுத்துச் சொல் வது மாத்திரமே உங்கள் கடமை. அவன், ''இல்லை அப்பா, நான் இப்படித் தான் செய்வேன்'' என்று சொன்னால் சரி சரி பையா அப்படியே செய். உன் இஷ்டப்படி! என்று சொல்லி விடுங்கள். இப்படிச் செய்வது மிகவும் சிறந்த மருந்து. நான் சொல்லக் கூடாது. இருந்தாலும் சொல்கிறேன். நான் அந்த மருந்தைத் தான் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். எனவே நான் உங்களுக்குச் சொல்லிய மருந்து மிகச் சிறந்த மருந்து. நீங்கள் ''இப்படிச் செய்'' என்று சொல்லுங்கள். அவன் ''இல்லை, நான் இப்படித்தான் செய்வேன்'' என்று சொன்னால், ''சரி அப்பா! அப்படியே செய்!'' என்று சொல்லி விடுங்கள்.

அநியாயத்தையோ, பாபத்தையோ நீங்கள் ஏற்றுக் கொள்ளாதீர்கள். நீங்கள் சாஸ்த்ரப்படி எடுத்துச் சொல்லி விட்டீர்கள். அவர்கள் கேட்கவில்லை என்றால் சாஸ்த்ரம் என்ன சொல்கிறது? அவர்களிடம் சண்டை போடுவீர்களா? அல்லது அதிகாரம் செலுத்த முயல்வீர்களா? உங்களுக்குச் சொல்ல மட்டுமே

Noolaham Digital Library

உரிமை உண்டு. ***"கர்மண்யேவாதி₄காரஸ்தே"*** ***(கீ₃தா 2/47)***–(செயலைச் செய்வதில் தான் உரிமை.) அப்படியே அவர்கள் ஏற்றுக் கொண்டால் அதனால் விளையும் பயனில் உங்களுக்கு ஒரு உரிமையோ, பங்கோ கிடையாது. ***"மா ப₂லேஷு கதா₃சந" (கீ₃தா 2/47)***–(பயனில் ஒருபோதும் பொறுப்போ, உரிமையோ கிடையாது.) உங்கள் பொறுப்பு போய்விட்டது. அதைச் செய்துவிட்டீர்கள். அவ்வளவு தான். சொல்ல வேண்டியது உங்கள் கடமை. அப்படியே செய்விக்க வேண்டியது உங்கள் கடமை அல்ல. அப்படிச் செய்ய வேண்டியது அவர்கள் கடமை. உங்கள் கடமை சரியான முறையில் எடுத்துச் சொல்வது தான். அவர்கள் தம் கடமையைச் செய்தால், உங்களுக்கு ஒரு பாதகமும் இல்லை. செய்யாவிட்டால் நஷ்டம் அவர்களுக்கு. உங்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. ஏனென்றால் நீங்கள் அவர்களுக்கு ஹிதத்தைத் தெரிவித்து விட்டீர்கள். இது மிகவும் விலைமதிப்பற்ற விஷயம்.

நாராயண ! நாராயண ! நாராயண !

Koviloor Digital Library

Koviloor Digital Library

மனதில் சஞ்சலம் எப்படி நீங்கும்?

மனதை அடக்கி வைத்திருப்பதன் அவசியத்தை மனிதர்கள் அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். மனம் ஈடுபடவில்லை என்றால் எதுவுமே நடப்பதில்லை. ராம—ராம என்று சொல்வதனால் மட்டும் என்ன ஆகும்? மனம் ஈடுபடுவதில்லையே? மனம் ஈடுபட்டுவிட்டால் எல்லாம் சரியாகிப் போகும். ஆனாலும் மனம் ஒருமைப்படுவதும், படாததும் அவ்வளவு பெரிய விஷயமில்லை. மனதில் உலகத்தின் மீது உள்ள பற்று, ஆசை, பிடிப்பு இருக்கிறதே, அதுதான் எல்லா அனர்த்தங்களுக்கும் காரணம். மனம் ஈடுபட்டுவிடலாம், ஸித்திகள் கிடைத்துவிடலாம், தனிப் பெருமை வந்து விடலாம். ஆனால் உலகப் பொருட் களின்பால் பற்று இருக்கும் வரை நன்மை ஏற்படாது. உள்ளத்திலிருந்து ஆசையும், பிடிப்பும் எப்போது போகுமோ, அப்போது தான்

Kavilo Digital Library

இந்த ஜனன மரணச் சுழல் ஒழியும்; துக்கமே ஏற்படாது. ஏனென்றால் விருப்பும், பிடிப்பும் தான் எல்லாத் துயரங்களுக்கும் காரணம்.

பதார்த்தங்கள், போகங்கள், மனிதர்கள், பொருட்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மேல் நாம் கொண்டிருக்கும் விருப்பம் (ராகம்); அவைகளிடத்தில் நம் மனதிற்கு உள்ள கவர்ச்சி நாம் கொள்ளும் இன்பம்; அது தான் குற்றவாளி. மனதின் சஞ்சலத்தன்மை அவ்வளவு கெடுதல் அல்ல. அதுவும் குற்றவாளிதான். ஆனால் அதை மட்டுமே குற்றவாளியாக மக்கள் கருதுகிறார்கள். அது சரியல்ல உண்மையில் குற்றவாளி, விருப்பம் (ராகம்), ஆசை, பற்று. ஸாதகனின் இத்தகைய பற்றுத் தான் உண்மையில் ஜனன—மரணம் விளைவிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உயர்ந்த அல்லது தாழ்ந்த யோனிகளில் பிறவிக்குக் காரணம் குணங்களின் சேர்க்கையே பற்று, பிரியம் இவைகளின் மேல் கவனம் செல்வதில்லை. ஆனால் சஞ்சலத்தன்மையைப்

Koviloor Digital Library

பற்றி எண்ணுகிறார்கள். உண்மையில் விருப்பம் தான் பிணைப்பை ஏற்படுத்துகிறது என்பதை உணரவேண்டும். சஞ்சலத்தன்மை அவ்வளவு பிணைப்பு ஏற்படுத்தக்கூடிய பொருள் அன்று தூக்கம் வரும்போது சஞ்சலம் போய் விடுகிறது; ஆனால் பற்று ஒழிவதில்லை. அதை வைத்துக் கொண்டே மனிதன் தூங்குகிறான்.

KOVILOOR MADALAYAM

மனிதன் (ராகத்தை) விருப்பத்தை விடுவதில்லை என்பதில் நான் மிகவும் வியப்படைகிறேன். உங்களுக்கு ரூபாய் மிகவும் நல்லதாகப்படுகிறது. நீங்கள் பெருமை பெற, புகழ் தேட பத்து, இருபது லக்ஷம் ரூபாய்களைக்கூடச் செலவழிப்பீர்கள். ஆனால், பணத்திடம் உள்ள ராகம் (ஆசை, பிரியம்) இருக்கிறதே அதைச் செலவழிக்க (விட்டுவிட) உங்களால் இயலாது. பணமா கெடுக்கிறது? அதனிடத்தில் உங்கள் ராகம் பற்று இருக்கிறதே அதை விட்டுவிடுவது தான் தேவை. இத்திடையில் மனிதர்கள் கவனம் செல்லவில்லை; லக்ஷியமும் செய்யவில்லை.

Koviloor Digital Library

ஆகவே நீங்கள் இந்த உண்மையில் கவனம் செலுத்துங்கள் இது தான் ராகம் இதன் பெருமை உள்ளூற மண்டியிருக்கிறது. ஆண்டுக்கணக்கான நீங்கள் ஸத்ஸங்கம் செய்கிறீர்கள். சிந்தனையும் செய்கிறீர்கள். உங்கள் கவனம் கூட இந்தப் பக்கம் செல்லவில்லை. இவ்வளவு அனர்த்தங்களுக்கும் காரணம் என்ன என்று யோசிக்கவில்லை. உலக விவஹாரத்தில், பரமார்த்த விஷயத்தில், உணவு–உண்டி, கொடுக்கல்–வாங்கல் போன்ற எல்லா இடங்களிலுமே இந்த ராகம் பெரிய இடையூறு. இது ஒழிந்தால் நம்முடைய வேலைகள் மிகவும் எளிதாகிவிடும். சுலபமாகிவிடும். ஆன்மிகத்திலும், உலக விவஹாரங்களிலும் முன்னேற்றம் ஏற்படும்.

ஆசையும், பற்றும் மிகவும் கேடு விளைவிப்பவை என்பதை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஸத்ஸங்கத்தின் உபதேசங்களைக் கேட்பீர்கள், நினைவில் வைத்துக் கொள்ளவும் செய்வீர்கள். ஆனால்

இந்தப் பற்றை ஒழிக்காமல் முன்னேற்றம் ஏற்படாது. நீங்கள் கேட்ட கேள்வி ''சஞ்சலம்'' எப்படிப் போகும்? என்பது. ஆனால் அடிப்படைக் கேள்வி, ''ஆசையையும், பற்றையும் எவ்வாறு அழிப்பது?'' என்று இருக்க வேண்டும். பகவான் கீதையில் இந்த ராகம் ஐந்து இடங்களில் இருப்பதாகப் பேசுகின்றார்.

''இந்த்$_3$ரியஸ்யேந்த்$_3$ரியஸ்யார்தே$_2$
ராக$_3$த்$_3$ வேஷௌ வ்யவஸ்தி$_2$ தௌ''
(கீ$_3$தா 3/34)

தன்னிடத்தில், புத்தியில், மனதில், புலன்களில், (புலன்கள் தேடும்) பொருட்களில் ஆகிய ஐந்து இடங்களில் ராகம் குடியிருக்கிறது. இந்த ஐந்திலும் கூர்ந்து சிந்தித்தால், ஸ்வயத்தில் ''தன்னில்'' இருக்கிற ராகம் தான் மற்ற நான்கிலும் இருப்பது நன்கு தெரிய வரும். ''ஸவயத்தில்'' உள்ள ராகம் போய்விட்டால் மனிதன் மனநிறைவு பெற்று விடுவான். சித்தம் சஞ்சலமாகவே இருக்கட்டும்; ''பற்று'' இருக்குமிடத்தில் பகவானிடத்தில் அன்பு

Koviloor Digital Library

ஏற்பட்டுவிட்டால் ராகத்தின் கணக்கே முடிந்துவிடும். பகவானிடத்தில் ஆகர்ஷணம் (ஈர்ப்பு) ஏற்பட்டுவிட்டால் உடனே ராகம் முற்றுலும் தீர்ந்துவிடும்.

பகவானிடத்தில் பக்தி ஏற்படுகிறதே, அதற்குப் பெரும் சிறப்புண்டு. ஞானம், மோக்ஷம் இவற்றைவிட அதிக மகிமை உண்டு என்று சொன்னாலும் மிகையாகாது. இந்தப் பிரேமையின் மகிமை உலகியலை ஒட்டியதல்ல. (தெய்வீகமானது). இதை மிஞ்சி எந்தத் தத்துவமும் இல்லை. ஞானத்தைவிட பிரேமை சிறந்தது. அந்தப் பிரேமையைப் போல் வேறு ஒன்றுமே கிடையாது. பகவானிடத்தில் பிரேமை ஏற்பட்டுவிட்டால் எல்லாம் சரியாகிவிடும்.

இந்தப் பிரேமை எப்படி ஏற்படும்? உலகில் இருக்கிற ராகத்தை (பற்றுதல்) விடு. பகவானிடத்தில் பிரேமை ஏற்படும். ராகம் எப்படி அகலும்? பகவானுடன் பிரேமை கொள்வதில் இரண்டு உண்மைகளும் அடங்கிவிடுகின்றன ராகத்தை அகற்றிக் கொண்டே போ; அதே சமயம்

Koviloor Digital Library

பகவானிடம் பிரேமையைப் பெருக்கு. ராமாயணம் படிக்கிறோம். மனதைச் செலுத்தி, அர்த்தத்தையும் புரிந்து கொண்டு படித்தோமானால் மனம் தெளிவடைகிறது. மனம் சுத்தமடைகிறது. ராகம் நீங்குகிறது. பகவானுடைய கதையைப் பிரேமையுடன் கேட்டால் உள்ளே இருக்கும் #ராகம் தானே அழிகிறது; பிரேமை ஏற்படுகிறது. அந்தப் பிரேமையில் ஒரு தனித்தன்மை கொண்ட சுவை நிரம்பியிருக்கிறது சஞ்சலம் நீங்குகிறது. நீங்கள் படித்துப் பாருங்கள். அதில் மனதைச் செலுத்துங்கள். அதனால் பெரும் பயன் ஏற்படும். ஏனென்றால் அது இயத்தில் சென்று தங்குகிறது. பிரேமை நுழைந்தால் ராகம் போய்விடும். அவை ஒழிந்தால் நீங்கள் முழு நன்மையும் பெற்றவர்களாக ஆகிவிடுவீர்கள். இந்த ராகம் ஆராய்ச்சி மூலமும் போய்விடும். ஆனால் விசாரத்தைவிட பிரேமை அதிக உபயோகமாக இருக்கும். பிரேமை எப்படி ஏற்படும்?

(ஸாதுக்கள், ஈச்வர பக்தர்கள், ஜீவன் முக்தர்களின் கதைகளை எப்போதும் பாடிக்

கொண்டிருங்கள் மனதைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக.)

மனதைத் தூய்மையாக வைத்து கொள்வது மிகமிக அவசியம். மனதின் சஞ்சலத்தன்மையைப் போக்கிக் கொள்வதைக் காட்டிலும், அதன் அசுத்தத்தை அகற்றுவது மிகவும் தேவையானது. மனதின் அசுத்தம் போனால் சஞ்சலத் தன்மையை அகற்றுவது எளிதாகிவிடும். மனம் தூய்மை அடைந்து விட்டால் அதை எங்கு வேண்டுமானாலும் ஈடுபடுத்தலாம்.

கபடம், வஞ்சனை, குறைபாடுகள் எல்லாம் பகவானுக்குப் பிடிப்பதே இல்லை. ஆனால், நீங்களோ இவற்றிற்கு அஞ்சுவதேயில்லை. பொய் சொல்வது, வஞ்சனை புரிவது, ஏமாற்றுவது ஆகியவற்றில் உங்களுக்கு அலுப்பே ஏற்படுவதில்லை. இவற்றைத் தெரிந்தே செய்கிறீர்கள். பிறகு மனம் எப்படிப் பிரேமையில் ஈடுபட முடியும்? வியாதியை உங்கள் தரப்பில் நீங்களாகவே வளர்த்துக் கொள்கிறீர்கள். இதில் ஆசை பிரியம் எவ்வளவு வைத்திருக்கிறீர்களோ

Koviloor Digital Library

அவ்வளவு விஷம் ஆபத்து விளைவிக்கக் கூடியது. சிந்தித்துப் பாருங்கள். பற்று மிகவும் ஆழத்தில் சென்று அமர்ந்திருக்கிறது. மனதில் உலகப் பொருட்களின் பாலுள்ள பெருமதிப்பு நன்றாக இடம் கொண்டிருக்கிறது. இது மிகவும் பெரிய தொல்லை. இதை அகற்ற ஸத்ஸங்கத்தில் ஈடுபட வேண்டும். நல்ல நூல்களைப் படிக்க வேண்டும். இதனால் ஆச்சரியப்படத்தக்க அளவு நன்மை ஏற்படும்.

மனம் எப்படி நிலை பெறும்? அதற்கு ஓர் எளிய வழி சொல்லித் தருகிறேன். பகவானுடைய பெயரை மனதில் நினையுங்கள். மனதிலேயே எண்ணிக் கொள்ளுங்கள். ராம, ராம, ராம என்று சொல்லுங்கள். ஒரு ராம, இரண்டு ராம, மூன்று ராம, நான்கு ராம, ஐந்து ராம. ஒன்று, இரண்டு என்று சொல்லாதீர்கள். விரல்களைப் பயன்படுத்தாதீர்கள். ஜபமாலையை உபயோகப் படுத்தாதீர்கள். மனதாலேயே இப்படி எண்ணிக் கொண்டு ஜபத்தில் ஈடுபடுங்கள். மீண்டும் மீண்டும் செய்து பாருங்கள். மனதை முழுமையாக

Koviloor Digital Library

ஈடுபடுத்தாமல் இப்படிச் செய்வது கடினம். செய்தீர்களானால் மனம் தானே ஈடுபட்டுவிடும்.

மிகவும் சுலபமான உபாயம் இது. மனதிலேயே பகவந் நாமத்தைச் சொல்லுங்கள், எண்ணுங்கள். மூன்றாவது முறை அந்த நாமத்தை மனதாலேயே எழுதிப் பாருங்கள். ராம என்ற எழுத்து மிகவும் பிரகாசமாகத் தோன்றும். தங்கமாக ஜொலிக்கும். இப்படிச் செய்தால் மனம் சலனமடைய அப்படிப் போனால் இந்த வேலை (மனத்திற்குள் ஜபம்) ஓடாது. மனம் எளிதாக இதில் ஈடுபட்டுவிடும். கஷ்டம் இருந்தால் இந்த மூறை தவறிவிடும். திருப்பெயரைச் சொல்ல முடியாது; எண்ணவும் முடியாது; பார்க்கவும் முடியாது. எனவே மனக்கண்களால் பார். மனக்காதுகளால் கேள். மன நாவினால் பேசு. இதனால் மனம் அலையாது நிலை பெற்றுவிடும்.

மற்றொரு வழி இது. வாயால் ஒரு தடவை சொல். மனதால் அடுத்த தடவை சொல். வாயால் இப்படிச் சொல்.

Koviloor Digital Library

ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥

இவ்விதம் செய்து கொண்டிரு. உள்ளே ராம, ராம என்று சொல்லி மனதையும் ஈடுபடுத்தி இரு. அப்போது பார்! மனம் ஈடுபடுகிறதா, இல்லையா என்று. இது நடக்கக் கூடிய ஒன்றாதலால் தான் சொல்கிறேன். உங்களுக்குக் கடினமாய் இருக்க காரணம் மனம் உங்கள் வசத்தில் இல்லை. மனதை இழுங்கள்; மனம் ஈடுபட்டுவிடும்.

மூன்றாவது வழியும் சொல்கிறேன்—மனத்தை ஈடுபடுத்தி விரும்பினால் மனதில் கீர்த்தனம் செய்; மனதிலேயே ராகம் போட்டுப்பாடு; மனம் லயித்துவிடும்; நாவினால் பேசாதே; குரல் எழுப்பிப் பாடாதே; மனதிலேயே கீர்த்தனம் செய்; மனதிலேயே ராகத்துடன் பகவந்நாம ஜபம் செய்.

முதலில் ஆசையை அகற்ற வேண்டியது முக்கியம். சேவை செய்வதால் ஆசைகள் அழியும். தோன்றி அழியும் பொருட்களைக் கொண்டு

Koyil.org Digital Library

ஏதாவது சேவை செய்ய வேண்டும். என்ற உணர்வை ஏற்படுத்திக் கொள். பாரமார்த்திக வழியில், அழியாப் பொருளில் (ஆன்மாவில்), பகவானுடைய கதைகளில் ஆசை தோன்றினால் ப்ரேமை ஏற்பட்டுவிடும். பகவானிடத்தில் பகவந் நாமத்தில், குணங்கள், லீலைகள் முதலியவற்றில் ஆசை ஏற்பட்டு விட்டால் பெரிய பயன் விளையும். சுயநலம் அபிமானம் இவற்றை விட்டு சேவை செய்தாலும், ராகம் (பற்று) அழிந்துவிடும்.

நாராயணா! நாராயணா! நாராயணா!

Koviloor Digital Library

ஸ்ரீஹரி:

மிகமலிவு விலையில் பகவத்கீதா வெளியீடு

16 பெரிய வண்ணப்படங்கள் உள்ளதும், 1022 பக்கங்கள் கொண்டதுமான, மிக உயர்ந்த இப்புத்தகம் ரூ.700 மதிப்புள்ள தானாலும், சலுகை விலையான (தபால் செலவுடன்) ரூ.100 க்கு தற்போது வழங்குகிறோம். M.O மூலம் ரூ.100 **கோபால் ஸேவா ட்ரஸ்ட், பகவத்கீதா நகர், ஈரோடு - 638003.** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் பகவத்கீதை உடனடியாக உங்கள் வீடு தேடிவரும்.

இதை உங்கள் நண்பர்களுக்குத் தெரியப்படுத்துவதால். ஆன்மீகப்பத்திரிக்கை களிலோ, T.V.யிலோ, விளம்பரம் செய்தால் **கீதையைப் பிரசாரம் செய்த புண்ணியம் கிடைக்கும். என்று ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா கீதை (அத்யாயம் 12ல் சுலோகம் 14-17 வரை அத்.18ல் சுலோகம் 66 முதல் 72 வரை) கூறுகிறார்.**

Koviloor Digital Library

கீதாப்ரஸ் கோரக்பூர்(உ.பி)அறிமுகம்

1. 1923 ஆம்ஆண்டு ஸ்ரீஜயதயால் கோயந்தகா அவர்கள் கீதாபிரஸ்ஸை நிறுவினார். அடுத்து வந்த ஹனுமான் பிரஸாத் போத்தார், சுவாமி ராமஸுகதாஸ் ஆகியோர், கீதாப்ரஸ்ஸுக்கு அயராத சேவை புரிந்தவர்கள். இவர்கள் மூவருமே பகவானை நேரில் தரிசித்தவர்கள். தற்சமயம் சுவாமி ராம்ஸுகதாஸ்ஜீ அவர்கள் தன் தள்ளாத 96வயதிலும் பகவத்சேவை புரிந்து வருகிறார். மற்ற இருவரும் பரமபதம் அடைந்து விட்டனர். நாங்கள், ராமாயணம், ஸ்ரீமத்பாகவதம், ஸ்ரீமத்பகவத்கீதா மற்றும் எண்ணிலடங்கா பக்தி நூட்களையும், கல்யாண கல்பதரு என்ற ஆங்கில மாதப் பத்திரிகையையும் அழகிய முகப்பில், சிறந்த பேப்பரில் குறைந்த விலையில் அச்சிட்டு வெளியிடுகிறோம்.

2. எங்கள் கீதாப்ரஸ் லீலாசித்ர மந்திரத்தில் ஸ்ரீராமபிரான், கண்ணபிரான் இவர் களின் லீலைகளை விளக்கும் அழகான ஓவியங்கள் உள்ளன. கீதையின் 700 சுலோகங்களும்

Koviloor Digital Library

பொறிக்கப்பட்ட பளிங்குக் கற்கள் சுவரில் பதிக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் 'கீதா ஜெயந்தி' இங்கு நடைபெறுகின்றது. ஆயுள்வேத மருந்துகள் நியாயமான விலையில் இங்கு கிடைக்கின்றன.

3. கல்கத்தாவில் உள்ள கோவிந்தபவன் கார்யாலயத்தில் ஸாதுக்களின் உபன்யா சமும், கீதா பாராயணமும் நடைபெறுகின்றன. ஸ்வாமி ராம்ஸுகதாஸின் அருளு ரைகளால் லக்ஷிக்கணக்கான பேர் பயன் பெறுகின்றனர்.

4. 1991 ஆண்டு தொடங்கிய எங்கள் கோபால் ஸேவா ட்ரஸ்ட், தென்னிந்திய மக்களின் மேன்மைக்காக தமிழ் மற்றும் எல்லாத் தென்னிந்திய மொழிகளிலும், அநேக ஆன்மீகப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுகின்றது. இதன் பொருட்டு ஹிந்தி, ஸமஸ்க்ருத மொழிகளில் உள்ள புத்தகங்களை தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, க்னனடம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்து கொடுக்க விரும்பும் மொழி வல்லுனர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

Koviloor Digital Library

கோபால் ஸேவா ட்ரஸ்ட்,

80,மோசிகிரனார்வீதி, ஜெயின்கோவில் அருகில்,
பகவத்கீதா நகர், ஈரோடு - 638003. போன்.213976

1.	800.	ஸ்ரீமத்பகவத்கீதா – தத்வவிவேசனீ (பிளாஸ்டிக்கவர்)	75.00
2.	795.	ஸ்ரீமத்பகவத்கீதா – (பொழிப்புரை)	5.00
3.	743.	ஸ்ரீமத்பகவத்கீதா மூலம்(ஸமஸ்க்ருதம் – தமிழ்	13.00
4.	793.	ஸ்ரீமத்பகவத்கீதா மூலம் & விஷ்ணுஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்	4.00
5.	600.	ஸ்ரீஹனுமாந் சாலிஸா	1.50
6.	389.	கீதா மாதுர்யம் (பகவத் கீதா)	8.00
7.	794.	விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்	1.50
8.	553.	குடும்பத்தில் எப்படி இருக்க வேண்டும்?	6.00
9.	423.	கர்ம ரஹஸ்யம்	3.00
10.	568.	சரணாகதி	4.00
11.	499.	நாரத பக்தி ஸூத்ரம்	1.00
12.	591.	மஹாபாவத்தில் உன்னைக் காத்துக் கொள்	3.00
13.	536.	கீதை கற்பதன் பயன்கள்	3.50
14.	607.	எல்லோருக்கும் மேன்மை எப்படி ஏற்படும்?	2.00
15.	606.	மிக உயர்ந்த நிலையை அடைவதற்கான வழி	2.00
16.	569.	உருவ வழிபாடு	1.50
17.	550.	திருநாம ஜபத்தின் மஹிமை	1.50
18.	551.	தூய்மையான உணவுப் பழக்கம்	1.50
19.	466.	ஸத்ஸங்கத்தின் ஸாரமான தத்வங்கள்	1.00
20.	655.	ஒன்றே செய்மின்! நன்றே செய்வீர்!!	5.00
21.	742.	கருக்கலைப்பு சரியா, தவறா?	2.50
22.	805.	தாய்மையின் பெருமை	2.00
23.	850.	மகான்களின் அமுத மொழிகள்	6.00
24.	608.	பக்தராஜ ஹனுமான் (கதைகள்)	5.00
25.	647.	கண்ணன் சித்ரக்கதை ,,	7.00
26.	649.	கோபால் ,,	7.00
27.	650.	மோஹன் ,,	7.00
28.	648.	ஸ்ரீ க்ருஷ்ணன் ,,	7.00

Koviloor Digital Library

29.	601.	பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் (கதைகள்)	5.00
30.	642.	ஸ்ரீக்ருஷ்ணனின் ஆருயிர் நண்பரான உத்தவரின் கதை	5.00
31.	127.	பயனுள்ள கதைகள்	5.00
32.	646.	பல்சுவைக் கதைகள்	5.00
33.	644.	சுசீலா—ஓர் லக்ஷ்யப் பெண்மணி(கதைகள்)	2.00
34.	643.	பகவான் உறையும் ஐந்து இடங்கள்	3.00
35.	645.	மஹாபாரத்திலுள்ள நள – தமயந்தி கதை	5.00
36.	609.	மஹாபாரத்திலுள்ள ஸாவித்ரி—ஸத்யவான்கதை	2.00
37.	741.	மஹாபாரத்திலுள்ள மஹாத்மா விதுரர் கதை	3.00
38.	850.	மஹான்களுடைய அமுத மொழிகள்	6.00
39.	★.	மஹான்களுடைய மணி மொழிகள்	6.00
40.	★.	மஹான்களுடைய சீரிய உபதேசங்கள்	6.00
41.	★.	இராமாயணத்தில் லக்ஷ்யப் பாத்திரங்கள்	5.00
42.	★.	மஹாபாரதத்தில் லக்ஷ்யப் பாத்திரங்கள்	5.00
43.	★.	சிறந்த ஏழு பக்தமணிகள்	5.00
44.	★.	வளமுள்ள வாழ்க்கைக்கு வழிமுறைகள்	3.00
45.	★.	கோபத்தை வெல்வது எப்படி?	2.00
46.	★.	லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்	10.00
47.	★.	கந்த ஷஷ்டி கவசம்	2.00
48.	★.	நாம் கடவுளை ஏன் நம்ப வேண்டும்?	2.00
49.	★.	சரணாகதியே கீதையின் ஸாரம்	2.00
50.	★.	கீதா, ராமாயணம், பாகவதம், மஹாபாரதத்தின் ஸாரம்	

★ இக்குறியுள்ள புத்தகங்கள் மிக விரைவில் வெளிவர உள்ளது.

இந்நூல்கள் அனைவரும் வாங்கும் வகையில் மிக மிக மலிவான விலையில் கிடைக்கும். மேலும் கீதை, ராமாயணம், பாகவதம் மற்றும் ஆன்மிக நூல்கள் (ஹிந்தி, ஆங்கிலம், ஸமஸ்க்ருதம், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில்) மலிவு விலையில் கிடைக்குமிடம்—கோபால் ஸேவா ட்ரஸ்ட்,பகவத்கீதா நகர், ஈரோடு—638003.

Koviloor Digital Library

மொழிபெயர்ப்பாளர்கள் - தேவை

கோரக்புர், கீதாப்ரஸ் நிர்வாகத்தினர் வெளியிட்டுள்ள ஸ்வாமி **ராம்ஸுக தாஸ்ஜீ . மஹராஜ், ஸ்ரீஜயதயால் கோயந்தகா** மாற்றும் பல சான்றோர்களின் ஹிந்தி மூலத்தில் உள்ள புத்தகங்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியை மேற்கொள்ள ஸமஸ்க்ருத, ஹிந்தி/தமிழ் மொழிவல்லுநர்கள் தேவைப்படுகின்றனர். மேலும் ஸமஸ்கிருதம், ஹிந்தியிலிருந்து மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஆங்கிலம் மொழிபெயர்ப்பாளர்கள் தேவை. மொழிபெயர்ப்பிற்குத் தகுந்த சன்மானம் தரப்படும். விருப்பம் உள்ளோர் அடியிற்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தமிழில் ஏற்கனவே ஸ்ரீமத்பகவத்கீதா அச்சடித்துள்ளனர். மேலும் பல பெரிய புத்தகங்கள் அச்சடிக்க உள்ளன.

கோபால் ஸேவா ட்ரஸ்ட்

81, மோசிகீரனார் தெரு,
பகவத்கீதா நகர், ஈரோடு-3
☎ 0424, 213976

* * * * * * * * * * * * * * * * * * *

R. தேவராஜன்
24, சித்திரக்குளம் தெரு,
மைலாபூர், சென்னை-4
☎ 4869247 (044)

டாக்டர் V.S. நரசிம்மன்
C/o, V.S. ஸ்ரீனிவாசன்
7, ராமச்சந்திர ஐயர் தெரு
டி.நகர், சென்னை-17
☎ 8222172 (044)

5520
R65
Koviloor Digital Library

உங்களுக்கு ஓர் வேண்டுகோள்

இக்கலியுகத்தில் நம்முடைய பாவ புண்ணியங்களை நாம் கோவிலுக்குச் சென்று வழிபட்டு மனசாந்தி அடைவதைவிட மகான்கள் திருவாய் மலர்ந்து அருளிய அமுத மொழிகளை நாம் பாராயணம் செய்வதிலும் இறைவனின் திருநாமத்தை உச்சரிப்பதாலும்தான் இப்பிறவி மோட்சம் அடைய முடியும்.

"கடுகு சிறிது எனினும் காரம் குறையாது" அது போல இந்த புத்தகத்தின் பக்கங்கள் குறைவாக இருந்தாலும் இதனுடைய பயன் மிகவும் நமக்கு நன்மை அளிக்க கூடியது.

இந்த புத்தகத்தை படித்து மற்றவர்களையும் பலன் அடையச் செய்யுங்கள்.

KOVILOOR ... ALAYAM
கோவிலூர் ஆதீ...
கோவிலூர்-630 307

Koviloor Digital Library

ஸ்ரீஹரி:

இப்புத்தகம் இருக்குமிடத்தில் சகல ஐஸ்வர்யங்களும் உண்டாகும்.

"ஓம் பரமாத்மநே நம:"
ஸ்ரீமத்பகவத்கீதா
தத்வவிவேசனீ-தமிழ் விரிவுரை

ஸ்ரீ ஜயதயால் கோயந்தகா
கீதாப்ரஸ், கோரக்பூர்-273 005

ஓம் ஸ்ரீரமாத்மனே நம:
குடும்பத்தில் எப்படி இருக்கவேண்டும்?

ஸ்வாமி ராம்ஸுகதாஸ்

||ஸ்ரீஹரி:||
பகவான் உறையும் ஐந்து இடங்கள் (கதைப் பகுதி)

ஸ்ரீ ஜயதயால்ஜீ கோயந்தகா

ஸ்ரீஹரி:
மோஹன்

ஓம் சரவணபவாய நம:
மஹான்களின் மணி மொழிகள்

ஸ்ரீ ஹனுமான் பிரசாத் போத்தார்

ஸ்ரீஹரி:
பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் (கதைகள்)

கீதாபரஸ், கோரக்பூர்

ஸ்ரீஹரி:
முக்கியமான எச்சரிக்கை

ஸ்வாமி ராம்ஸுகதாஸ்

ஸ்ரீஹரி:
பக்தராஜ ஹனுமான் (கதைகள்)

ஸ்ரீ ஹனுமான் பிரசாத் போத்தார்

ஸ்ரீஹரி:
கடையோனுக்கும் கடவுட்காட்சி

கீதாபரஸ், கோரக்பூர்